# 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

## 8.1. முன்னுரை

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாணவர்களுக்குத் தரமான பாடநூல்களை அச்சடித்து விநியோகம் செய்வது இக்கழகத்தின் நோக்கம்.

## 8.2. பாடநூல்கள் அச்சடிப்பு

1) மாநில பாடத்திட்டத்தில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்.
2) மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்பு பாடநூல்கள்.
3) சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப்பாடநூல்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.
4) +1 மற்றும் +2 மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாடநூல்கள்.
5) ஆசிரியர் பட்டயப் பயிற்சி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான வளநூல்கள்.
6) ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விக்கான பாடநூல்கள்.
7) ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் மற்றும் குறிப்பேடுகள்.
8) வினா வங்கி, மாதிரி வினாவங்கி

## 8.3. பாடநூல்கள் இலவச விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக பாடநூல்களை வழங்கிவருகிறது. மேலும் சுயநிதிப்பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக பாடநூல்களை இலவசமாக கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறது.

| வரிசை எண் | வெளி மாநிலங்கள் | பாடநூல்களின் எண்ணிக்கை | மதிப்பு ரூ. பை. |
|---|---|---|---|
| 1 | மும்பை மாநகராட்சி, மும்பை. | 19575 | 2,84,525.00 |
| 2 | டெல்லி தமிழ் சங்கம், டெல்லி. | 10100 | 1,45,325.00 |
| 3 | அகமதாபாத் மாநகராட்சி, அகமதாபாத், குஜராத். | 1025 | 14,897.00 |
| 4 | தமிழ் ஐக்கிய சங்கம், எண்ணாகுளம், கேரளா. | 815 | 11,605.00 |
| 5 | அந்தாமான் நிக்கோபார், போர்ட் பிளேர். | 5075 | 81,046.00 |
| | மொத்தம் | 36590 | 5,37,398.00 |

மேலும் தமிழ்நாடு பாடநூல் கழகம் குறிப்பேடுகளை பொதுச்சந்தையில் விற்பனை செய்துவருகிறது.